# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2046/88 - 2017 නොවැම්බර් මස 25 වැනි සෙනසුරාදා - 2017.11.25

*2046/88 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் - 2018**

தேருநர் இடாப்புக்களைக் காட்சிப்படுத்தல்

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்காக பயன்படுத்தப்படவிருப்பது 2017, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கான அதாவது பாராளுமன்றத் தேர்தல்களுக்கான தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த உள்ளூர் அதிகார சபைகளுக்காக தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்பு எனவும், அத்தேருநர் இடாப்புக்கள் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அந்தந்த உள்ளூர் அதிகார சபைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளனவெனவும், பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களினதும் பெயர்களை இவ்விடாப்புக்களில் உட்சேர்ப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதென்பது இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

தனது பெயர் முறையாக உரிய உள்ளூர் அதிகார சபையின் இடாப்பில் உட்சேர்க்கப்படவில்லையென எவரேனும் வாக்காளருக்குத் தெரியவரின் அல்லது தகைமையற்ற ஒருவரின் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரியவரின் அதுபற்றி 2017, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் அந்தந்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு எழுத்து மூலம் அறிவிக்க முடியுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. இதுபற்றி உரிய அறிவித்தல்களை அனைத்து உள்ளூர் அதிகார சபை நிறுவனங்களிலும் பார்வைக்கு வைப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளார்களென்பதும் அறிவித்தல் இத்தால் கொடுக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல்கள் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல்கள் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல்கள் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2017, நவெம்பர் 25.